**ஜூலை - 12**

**"குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்."**

**- யோவா 8 : 36.**

அந்தப்பெரிய போதகருடைய வார்த்தையில் கவனம் செலுத்தி, எல்லாக் காரியங்களிலும், அவருடைய மாணாக்கராகத் தொடர்ந்து இருக்கிற உண்மையுள்ள சீஷர்கள், மூட நம்பிக்கைகளிலிருந்தும், அறிவீனத்திலிருந்தும் விடுதலையடைந்திருக்கிறதுமல்லாமல், பாவத்துக்குத் தொண்டு செய்வதிலிருந்தும் விடுதலையடைந்து, அதற்குப் பதிலாகத் தங்களுடைய சொந்த இயல்பான பலவீனங்களையும், கறைகளையும் பற்றிய சரியான மதிப்பையும், தெய்வீக மனதையும், அதாவது, சத்தியத்தைப்பற்றிய சரியான மதிப்பையும் பெறுகிறார்கள். அதன் பலனாக, அவர்களுடைய விடுதலை கெடுதி செய்வதற்குப் பதிலாக ஆசிர்வதிக்கிறதொன்றாகிறது. பெருமை, வீம்பு பேசுதல் இவைகளுக்குப் பதிலாக மனத்தாழ்மையைக் கொண்டுவருகிறதொன்றாகிறது. கோபத்துக்குப் பதிலாக பொறுமையைக் கொண்டுவருகிறதொன்றாகிறது. துவேஷம், சுயநலம் இவைகளுக்குப் பதிலாக, தாராளம், இரக்கம் இவைகளைக் கொண்டுவருகிறதொன்றாகிறது. திருப்தியின்மை, கசப்பு இவைகளின் ஆவிக்குப் பதிலாக சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டுவருகிறதொன்றாகிறது. உண்மையாகவே குமாரன் மாத்திரமே நம்மை விடுதலை செய்யக்கூடும். **- Z '99, 57 (R 2438)**

தேவனுடைய குமாரன் அடிமைத் தளையை அறுத்து விடுவிக்கிற மகான். மிகவும் கொடுமையான ஆளோட்டிகளாகிய பாவம், வஞ்சகம், சுயநலம், உலகத்தனம், மரணம், நரகம் இவைகளின் கைகளிலிருக்கிற மிகவும் பரிதாபப்படத்தக்க வகையிலுள்ள அடிமைகளுக்கு, மிகவும் நியாயமற்ற வகையின் (சாத்தானின்) அடிமைத்தனத்தினின்று அவர் விடுதலையளிக்கிறார். விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல் ஆகிய இவைகளைக் கொண்ட மிகவும் சுத்தமான நோக்கங்களை அப்பியாசிப்பதிலிருந்து, தேவனுடைய சித்தத்தை விரும்புவதற்குரிய மிகவும் நல்லமாதிரியான நித்திய ஜீவனுக்கு நடத்துகிற மகிமையான சுதந்திரத்தை அவர்களுக்கு அளிக்கிறார். மிகவும் ஒப்பற்ற பலியினாலும் ஊழியத்தினாலும் வாய்க்கச் செய்யப்பட்டிருக்கிற இவைகள் எல்லாவற்றையும் அவருடைய அன்பின் ஈவாகக் கொடுக்கிறார். இது உலக சரித்திரத்தின் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. **- P '34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஏசா 49:24-26; 61:1-3; 63:4; லூக் 4:18; யோவா 8:31-35; ரோம 7:22,23; 8:2; 2கொரி 3:17; கலா 3:28; 5:1; கொலோ 3:11; 1யோவா 1:7-9; கொரி 1:5; 5:9.**

**கோபுர வாசிப்பு : Z '14, 227 (R 5506)**

**வினாக்கள் : கிறிஸ்தவ சுயாதீனத்தில் இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலாபலன் என்ன?**